# தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
## (சுருக்கம்)

நிர்வாகம் - படிகள் - வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படி - சேலம் மற்றும் ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட நாமக்கல் மின்பகிர்மான வட்டத்தில் பணிபுரியும் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு Grade 1(b) நிலைக்குண்டான உயர்த்தப்பட்ட படிகள் வழங்க – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**(செயலகக் கிளை)**

(நிலை) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயல்முறை ஆணை எண். 147, நாள்: 01.08.2019.

ஆடி – 16–ம் நாள்,
விகாரி வருடம்
திருவள்ளுவர் ஆண்டு 2050.

படிக்கப்பட்டது:

1. அரசாணை நிலை எண்.305, நிதி (படிகள்) துறை, நாள்:13.10.2017.
2. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவு எண். ந.க.16515/2018 (எச்-2), நாள்: 07.07.2018.
3. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவு எண். ந.க.1047/2018/ஆர்-3), நாள்: 23.08.2018.

****

**செயல்முறைகள்:**

பார்வை 1-ல் கண்டுள்ள அரசாணையில் 7-வது ஊதியக்குழு பரிந்துரையின்படி அரசு பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி மற்றும் அனைத்து படிகளும் உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

2. பார்வை 2-ல் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆணையின்படி சேலம் மாநகராட்சி எல்லையிலிருந்து 16 கிமீ சுற்றளவிற்குள் வரும் நாமக்கல் மாவட்டத்தை சார்ந்த கீழ்காணும் பட்டியலில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் உள்ள பகுதிகளில் பணிபுரியும் அரசு அலுவலர்களுக்கு சேலம் மாநகராட்சிக்கான வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

1. ராசிபுரம்
2. திருச்செங்கோடு

3. பார்வை 3-ல் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆணையின்படி ஈரோடு மாநகராட்சி எல்லையிலிருந்து 16 கிமீ சுற்றளவிற்குள் வரும் கீழ்காணும் பட்டியலில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் உள்ள பகுதிகளில் பணிபுரியும் அரசு அலுவலர்களுக்கு ஈரோடு மாநகராட்சிக்கான வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

1. திருச்செங்கோடு நகராட்சி
2. திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம்
3. எலச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றியம்
4. பரமத்தி ஊராட்சி ஒன்றியம்
5. கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம்

4. மேற்காணும் அரசு ஆணையை பின்பற்றி சேலம் மற்றும் ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் பணிபுரியும் மின்வாரிய பணியாளர்களுக்கு நிலை உயர்த்தப்பட்ட வீட்டு வாடகைப்படி மற்றும் நகரஈட்டுப்படி வழங்கிட கோரிக்கை வைக்கப்பட்டது.

5. இக்கோரிக்கையை கவனமாகப் பரிசீலிக்கப்பட்டதின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு ஆணையினை அடிப்படையாகக் கொண்டு சேலம் மற்றும் ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பார்வை 2 மற்றும் 3-ல் உள்ள கடிதத்தில் தெரிவித்துள்ள இடங்களில் பணிபுரியும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக பணியாளர்களுக்கு **Grade-I(b)** நிலைக்குண்டான உயர்த்தப்பட்ட வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படியினை இவ்வாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து வழங்க ஆணையிடப்படுகிறது.

**(தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் ஆணையின்படி)**

**வீ. சின்னப்பையன்**
**செயலாளர்**

பெறுநர்:

அனைத்து தலைமைப் பொறியாளர்கள்.
தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்/பொது/வருவாய்.
தலைமை உட்தணிக்கை அலுவலர்/தணிக்கைக் கிளை.
அனைத்து மேற்பார்வை பொறியாளர்கள்.
அனைத்து துணைச் செயலாளர்கள், செயலகக்கிளை.
தன்னகத் தணிக்கை அலுவலர் (மாநில கணக்கு துறைத் தலைவர்).
அனைத்துக் கிளைகள் (தலைமையிடம்).

**நகல்:–**

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் பார்வைக்கு.
இணை மேலாண்மை இயக்குநர் பார்வைக்கு.
காவல் துறை இயக்குநர்/விழிப்புப்பணி
மேலாண்மை இயக்குநர்/தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்.
அனைத்து இயக்குநர்கள்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம்.
செயலாளர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்/சென்னை–2.
சட்ட ஆலோசகர்/ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
செயலாண்மை உதவியாளர்/தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அலுவலகம்.
செயலாண்மை உதவியாளர்/இணை மேலாண்மை இயக்குநர் அலுவலகம்.
துணைத் தலைமைப் பொறியாளர்/நிர்வாகக் கிளை.
முதுநிலை பணித்தொகுதி அலுவலர்கள்/நிர்வாகக் கிளை.
தொழில் உறவு ஆலோசகர்.
இயக்குநர்/தமிழ்நாடு மின்வாரிய பதிப்பகம்.
இயக்குநர்/கணினி மையம்.
தலைமை மருத்துவ அலுவலர், தலைமையிட மருந்தகம்.
தொழில் உறவு அலுவலர்.
அனைத்து அலுவலர்கள், பிரிவுகள்/செயலகக்கிளை.

..3..

தலைமை மக்கள் தொடர்பு அலுவலர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
உறைவிட மேலாளர்/புதுதில்லி.
உதவி பணித்தொகுதி அலுவலர்/தமிழ் வளர்ச்சி/த.நா.மி.வா. இதழில் பிரசுரிப்பதற்காக.
டி.என்.எப்.சி – டவர் எண்.490/3–4, அண்ணா சாலை, நந்தனம், சென்னை–35
தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், ஈ.வி.கே.சம்பத் மாளிகை, 5 வது மாடி, கல்லூரி சாலை, சென்னை–6.
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 19, A, ருக்மணி லட்சுமிபதி சாலை (மார்சல்ஸ் ரோடு) எழும்பூர், சென்னை–8.
தமிழ்நாடு மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம்.
தமிழ்நாடு மின்வாரிய கணக்காயர் மற்றும் களத்தொழிலாள்ர் சங்கம்.
தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு.
மின்சாரப் பிரிவு அண்ணா தொழிற்சங்கம்.
தமிழ்நாடு மின் வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்.
தமிழ்நாடு தேசிய மின் தொழிலாளர் சம்மேளனம் (இரண்டு பிரிவுகள்)
தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர் சங்கம்.
தமிழ்நாடு மின் ஊழியர் காங்கிரஸ்.
தமிழ்நாடு மின்வாரிய தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம்.
தமிழ்நாடு மின் வாரிய பொறியாளர் கழகம்.
தமிழ்நாடு மின் வாரிய நிதி மற்றும் கணக்கு அலுவலர் சங்கம்.
பாரதீய மின் தொழிலாளர் சம்மேளனம்.
தமிழ்நாடு மின் வாரிய கார்டு பில்லிங் ஸ்டாப் சங்கம்.
தமிழ்நாடு மின் வாரிய டாக்டர் அம்பேத்கார் எம்ப்ளாயீஸ் யூனியன்.
தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் யூனியன்.
தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன்

**//உண்மை நகல் // உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//**

1/8/19

பிரிவு அலுவலர்

1/8/19